# தமிழ் இலக்கிய வகைகள்

## தோற்றமும் வளர்ச்சியும்

ந.வீ. செயராமன்

தமிழிலுள்ள இலக்கிய வகைகள் எண்ணிறந்தவை. இவற்றைப் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்னும் இருவகைப் பகுப்பினுள் அடக்கலாம். இலக்கிய அளவு, பாடுபொருள், அமைப்புநிலை ஆகிய காரணங்கள் இத்தகைய இருவகைப் பகுப்புக்கும் அடிப்படையாக உள. பேரிலக்கியங்கள், நீண்டு செல்லும் தொடர்நிலைச் செய்யுட்களாய், பாட்டுடைத் தலைமக்களின் முழுமையான வாழ்க்கையைப் பாடுபொருளாகக் கொண்டு, யாப்பு வகை, உத்திமுறை முதலிய அமைப்பு நிலைகளில் பல்வேறு திறத்தனவாய் விளங்குகின்றன. ஆனால், சிற்றிலக்கியங்கள், குறிப்பிட்ட ஒரு பாவகை அல்லது சில பாவகைகளால், பாட்டுடைத் தலைமக்களின் ஒரு சில வாழ்வியல் நிகழ்ச்சிகளை மட்டும் விளக்கும் அமைப்புடையன.

தமிழில், இன்றுள்ள இலக்கிய வகைகளில், பெருங்காப்பியம், காப்பியம், புராணம் என்பன பேரிலக்கியவகை என்னும் பகுப்பிற்குரியன. பிற அனைத்து இலக்கிய வகைகளும் சிற்றிலக்கியவகை என்னும் பகுப்பினுள் அடங்குவனவாகும். பேரிலக்கிய வகையில் ஒன்றாக வரும் புராணம் என்னும் இலக்கிய வகையைச் சிற்றிலக்கியப் பகுப்பிற்குரியதாகவும் கொள்ள இடமுண்டு. பாட்டியல் நூல்களிலும், இவ்விருவகைக் கருத்துக்களும் உள.

பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் தற்கால இலக்கிய வகைகளான புதினம், சிறுகதை என்பவற்றை ஒத்து அமைந்தவை என்றும்,[1] பேரிலக்கியம், சிற்றிலக்கியம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட நிலையினதாக அமைந்த கோவை என்பது, தற்கால இலக்கிய வகையாகிய குறுநாவல் என்பதனோடு ஒத்து அமைந்தது என்றும்[2] திறனியர் உவமை கூறுவர்.

### தொல்காப்பியர் கால இலக்கிய வகைகள்

தொல்காப்பியர், தன் காலத்து வழங்கிய இலக்கிய வகைகள் இவை என எவற்றையும் விதந்து தெளிவுறுத்தவில்லை. எனினும், தொல்காப்பியத்தில் இடம்பெற்ற சில குறிப்புக்களால், அவர் காலத்தில் வழங்கியனவாகக் கருதப்படும் சிலவற்றை இலக்கிய வகைகளாகக் கொள்கிறோம்.

1. 'சிற்றிலக்கியம் ஒரு சிறுகதை என்று கொண்டால், பேரிலக்கியம் ஒரு நாவல் என்று கொள்ளலாம். நாவல் ஒரு தனி மனிதன் அல்லது குடும்பம் இவர்களின் வாழ்க்கையில் நிகழும் பெரும்பகுதியை எடுத்துரைப்பதாகும். நாவலையே பாவடிவில் பாடிவிட்டால் பேரிலக்கியமாக அமைந்து விடும். எனவே நாவலுக்கும் பேரிலக்கியத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு, எழுதப்படும் மொழிநடையே யாகும். ஒன்று உரைநடையில் அமையும். மற்றது பாவடிவில் அமையும். சிறுகதை, ஒருவரது வாழ்க்கையின் சிறு பகுதியை, அவரது வாழ்வில் நிகழும் சிறு நிகழ்ச்சியை விளக்குவது ஆகும். சிற்றிலக்கியங்களும் அவ்வாறே அமைகின்றன. ஆனால், சிற்றிலக்கியங்கள் பாவடிவில் புனையப்படுகின்றன. சிறுகதை, உரைநடையால் எழுதப்படுகிறது. எனவே சிற்றிலக்கியத்திற்கும் பேரிலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடு, சிறுகதை, நாவல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடு போன்றதே யாகும்.' — சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும் — டாக்டர் முத்துச் சண்முகன், நிர்மலா மோகன் — மதுரை, முத்துப் பதிப்பகம், 1979, ப. 5 — 6.
2. 'சிற்றிலக்கிய வகைகளுள் கோவை மட்டும், தலைவன் தலைவியரின் களவு வாழ்க்கையை விரிவாக எடுத்துக் கூறுகின்றது. எனினும் அதனைப் பேரிலக்கியத்தில் சேர்க்க இயலாது. அது, சிற்றிலக்கிய அளவினின்றும் சிறிது விரிந்தது; அவ்வளவே, எனவே, அதனைச் சிறுகதைக்கும் நாவலுக்கும் இடைப்பட்ட குறுநாவல் என்பதனோடு ஒப்பிடலாம்' — சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும் — டாக்டர் முத்துச் சண்முகன், நிர்மலா மோகன் மதுரை, முத்துப் பதிப்பகம் — 1979, ப. 6.

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்'[3]

எனவரும் நூற்பாவில் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என ஏழுவகைகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவற்றுள், பாட்டு என்பது அடிவரையறையுடைய இலக்கியம் என்றும், எஞ்சிய ஆறும் அடிவரையறை அற்றவை என்றும் பிறிதொரு நூற்பாவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.[4] இக்குறிப்புக்களால், தொல்காப்பியர் கால இலக்கியங்கள்அடிவரையறை உடையவை, அடிவரையறை அற்றவை என்ற இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன என்பதையும், அடிவரையறை அற்ற இலக்கியங்கள், உரை முதலாக ஆறு வகைப்படும் என்பதையும் அறியலாம். மேலும், பாட்டு என்னும் அடிவரையறை உடைய இலக்கியப் பிரிவில் யாப்பு வகையாலும், பொருண்மை நிலையாலும் வேறுபட்ட இலக்கிய வகைகள் சிலவும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கின. சான்றாக, யாப்பு வகையால் பெயர் பெற்ற இலக்கிய வகை பரிபாடல்.[5] பொருள் வகையால் பெயர் பெற்ற இலக்கிய வகை வாழ்த்தியல்.[6] இம்முறையில் வேறு சிலவும் தொல்காப்பியர் கால இலக்கிய வகைகளாக வழங்கியிருக்கலாம். எனினும் இக்கருத்தை உறுதி செய்யத் தெளிவான சான்றுகள் இல.

தொல்காப்பியக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய இலக்கிய வகைகளாகப் பலவற்றை அறிஞர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும் இவண் நினையத் தகுவனவாம்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம், அகம், புறம் ஆகிய இரு இலக்கிய வகைகளோடு, தொல்காப்பியர், செய்யுள் வனப்புக்கள் எனச் சுட்டிய அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எட்டும் அக்காலத் தமிழ் இலக்கிய வகைகளே எனக் குறிப்பிட்டுள்ளார்.[7]

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, தொல்காப்பியர் காலத்தில் 42 இலக்கிய வகைகள் வழங்கின என்பதற்குரிய குறிப்புக்கள் தொல்காப்பியத்தில் உள என்று குறிப்பிட்டு, அவற்றைப் பட்டியலிட்டும் காட்டியுள்ளார்.[8] இங்குக் காட்டப்பெறுவனவற்றுள்,

3. தொல். இளம். செய். நூ. 75.
4. தொல். இளம். செய். நூ. 157.
5. ''பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப'' — தொல். இளம். செய். நூ. 116.
6. ''வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே'' — தொல். இளம். செய். நூ. 105.
7. 'தமிழ் இலக்கண ஆசிரியர்களும் அகத்திணை, புறத்திணை இலக்கணங்களை வழிவழி நூற்பிப்பது முறையாயிற்று. இவையிரண்டும் தமிழுக்கே உடைய சிறப்பிலக்கியங்கள், சிறப்பிலக்கணங்கள். பொது இலக்கிய வகைகளும் நம்மொழிக்கண் உள என்பதைத் தொல்காப்பியம் தெளிவாக்கும்.
'அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனுஅப்
பொருந்தக் கூறிய எட்டு' (தொல். 1258)
என்றபடி எட்டு வகையான பிற இலக்கியங்கள் இருந்தன எனவும், இவை 'வனப்பு' என்ற பொதுப் பெயரால் வழங்கப்படும் எனவும், வரலாறு, பழம்பொருள், புதுப்பொருள் என்ற கருத்து நிலைக்களத்தில், பல்வேறு யாப்பில் இவை செய்யப்படும் எனவும் செய்யுளியல் ஓரளவு விதந்து கூறுகின்றது... இவ்விரண்டினையும் சேர்ப்பின், தொல்காப்பியர் காலத் தமிழ், பத்து வகை இலக்கிய வளம் உடையதாகும்.' — தமிழ்க் காதல் — டாக்டர் வ.சுப. மாணிக்கம், சென்னை, பாரி நிலையம், 1962, பக். 275.
8. ''அங்கதச் செய்யுள், அவையடக்கியல், ஆற்றுப்புடை, இயன்மொழி வாழ்த்து, உரைச் செய்யுள், ஊரொடு தோற்றம், ஓம்படை, கடைநிலை, கடைக்கூட்டுநிலை, கண்படை நிலை, கந்தழி, கல்நடுதல், களவழி, குடைநாட்கோள், குடைநிழல் மரபு, குரவைப்பாட்டு, கைக்கிளை, கையறம், கொடிநிலை, கொற்றவள்ளை, செவியறிவுறூஉ, செவியுறைச் செய்யுள், தாயபனுவல், துயிலெடைநிலை, பண்ணத்தி, பரிபாடல், பிசி, புறநிலை வாழ்த்து, பூவைநிலை, பெருமங்கலம், மண்ணுமங்கலம், மந்திரம், முதுமொழி, வள்ளி, வள்ளைப் பாட்டு, வாண்மங்கலம், வாயுறை வாழ்த்து, வாழ்த்துவகை, வாள்நாட்கோள், விளக்குநிலை, வெறியாட்டு, வேள்விநிலை ஆகிய 42 இலக்கிய வகைகள்.''
— நவநீதப்பாட்டியல், எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்பு, 1943, ப. 119 — 120.

ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, கைக்கிளை, பரிபாடல், மந்திரம் ஆகிய ஐந்து இலக்கிய வகைகளுக்கு இன்று எடுத்துக் காட்டு நூல்கள் உள. இப்பட்டியலில், தொல்காப்பியர் குறிப்பிட்ட பல்வேறு அகத்துறைகளும் புறத்துறைகளும் இலக்கிய வகைகளாகச் சுட்டப்பட்டுள்ளன என்பதும் அறியத்தக்கது. மேலும், தொல்காப்பியர் கால இலக்கிய வகைகளாக மொழியப்பெற்ற 42 வகைகளில் ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து,

கடைநிலை, கண்படைநிலை, செவியறிவுறூஉ, துயிலெடைநிலை, புறநிலை வாழ்த்து, பெருமங்கலம், வாயுறை வாழ்த்து, விளக்கு நிலை ஆகிய பத்தையும் பாட்டியல் நூல்களும் இலக்கிய வகைகளாகக் குறிப்பிட்டுள்ளன.[9]

டாக்டர் மா. இராசமாணிக்கனார், பிள்ளைத்தமிழ், உலா நூற்கள், மடல்நூற்கள் முதலியன தொல்காப்பியர் காலத்திருந்தன என்று கூறுவார்.[10] மு. சண்முகம் பிள்ளை அகம்பற்றியன, புறம்பற்றியன, அரசனோடு தொடர்புடையவை, மக்கள் தொடர்பு கொண்டவை, பொது வகையானமைந்தவை, வாழ்த்துவகை, செய்யுள் வகைகள் என ஏழு பிரிவுகளில் 46 இலக்கிய வகைகள் தொல்காப்பியர் காலத்தில் வழங்கின எனக் குறிப்பிட்டுள்ளார்.[11] மேலே, வையாபுரிப்பிள்ளை கூறியனவாக அமைந்த பட்டியலுக்கு மேலும், நான்கு புதிய இலக்கிய வகைகள் இதனுள் சேர்த்து மொழியப்பட்டுள்ளன. கையறுநிலை, அகவல், வஞ்சிப்பா, வெண்பா என்பன இங்குக் கூறப்பெற்ற புதிய இலக்கிய வகைகள். பரிபாடல், கைக்கிளைச் செய்யுள், வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலைவாழ்த்து, ஆற்றுப்படை ஆகியனவற்றைத் தொல்காப்பியர், இலக்கிய வகைகளாகக் கருதியிருக்கக்கூடும் என டாக்டர் ப. அருணாசலம் உரைப்பர்.[12]

இங்ஙனம், தொல்காப்பியர் கூறிய பல்வேறு துறைகளையெல்லாம் தொல்காப்பியர் கால இலக்கிய வகைகளாகக் கூறும் கருத்துரைகள், பல அறிஞர்களால் கூறப்பட்டுள்ளன. இலக்கிய வகைகளைப் பாகுபடுத்திக் காணும் வகைபாட்டியல் ஆய்வு முயற்சியின் கூறுகளாகவே இக்கருத்துரைகள் அமைந்துள என்று கொள்ளல் வேண்டும்.

தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர், சங்ககாலம் முதலாக இன்றுவரை, தமிழில், பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றியும் வளர்ந்தும் வருகின்றன.

## இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுதல்

காலந்தோறும் தோன்றி வளர்ந்து வரும் இலக்கிய வகைகள் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாகவும் அமைந்துள்ளன. ஒரு புதிய இலக்கிய வகையின் தோற்றத்திற்குப் பழைய இலக்கியவகையொன்று ஏதேனும் ஒரு வகையில் காரணமாக அமைதல் பெரும்பான்மை நிலை. இலக்கிய வகைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடன் அமைந்திருக்கும் இந்நிலையைப் பின்வருமாறு அறிஞர் குறிப்பிடுவர்.

> ''இலக்கிய வரலாற்றில் வகைகள் என்பன அரிமா நோக்குடையன என்பர். ஒரு வகை, முன்னைய வகைகளிலிருந்து கிளைக்கின்றது. பின்னைய வகைகள் கிளைவிட அடிப்படையாய் அமைகின்றது. ஒவ்வொரு வகையும் பல உட்பிரிவுகளை உடையது. சிலவகைகள் பிள்ளைப்பேறு போலப் பல்குந்தன்மையன. சில, உடன்பிறப்புப்போல் தோன்றுவன. தாயும் சேயும் போல்வன மட்டுமின்றிப் பேரனும் பேர்த்தியும் போல்வனவும் உள. சில, தூரத்து உறவுடையன. முதலும் சினையுமாய்ச், சினையும் கிளையுமாய்க், கிளையும் கொம்புமாய்ப் பயிரின வகை போல் வளரும் இலக்கிய வகைமை நினைதற்குரியது.''[13]

9. சிற்றிலக்கியத் திறனாய்வு – டாக்டர் ந.வீ. செயராமன் – சென்னை, இலக்கியப் பதிப்பகம் – 1980, ப. 40.
10. தமிழ்மொழி இலக்கிய வரலாறு – டாக்டர் இராசமாணிக்கனார் – சென்னை, பாரி நிலையம், ப. 94 – 102
11. சிற்றிலக்கிய வளர்ச்சி – மு. சண்முகம்பிள்ளை – சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1981, ப. 30 – 31.
12. தொல்காப்பியர் – டாக்டர் ப. அருணாசலம் – சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1975, ப. 127 – 130.
13. சங்க இலக்கிய ஒப்பீடு – டாக்டர் தமிழண்ணல் – மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1977, ப. 10.

இங்ஙனம் மனித உறவு நிலைபோல, இலக்கிய வகைகளின் தொடர்பு நிலைகளும் அமைந்துள்ளன.

இம்முறையில், பல்வேறு தொடர்புச் சூழலில் கிளைத்து வளர்ந்த இலக்கிய வகைகள் அனைத்தையும், ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கி, அவற்றுக்கு இலக்கணம் கூறும் முயற்சி கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கியது. பாட்டியல் நூல்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெறத் தொடங்கி விட்டாலும், கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் பன்னிரு பாட்டியலே, இன்று நமக்குக் கிடைக்கும் முதற் பாட்டியல் நூலாகும்.[14] பன்னிருபாட்டியல், கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள கால எல்லையில் தோன்றியிருத்தல் வேண்டும் என்றும் கருத்துரைப்பர்.[15]

கி.பி. 12 ஆம் நூற்றாண்டினதாய பன்னிருபாட்டியலில் 62 இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறப் பெற்றுள்ளது. அதே நூற்றாண்டின் இறுதியில் எழுந்த வெண்பாப் பாட்டியலில் 54 இலக்கிய வகைகளுக்குரிய இலக்கணம் உள்ளது. இவற்றை அடுத்து, நவநீதப் பாட்டியல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இதில் 45 இலக்கிய வகைகளின் இலக்கணம் இடம் பெற்றுள்ளது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த பிரபந்த மரபியலில் 62 இலக்கிய வகைகளுக்கும், சிதம்பரப்பாட்டியலில் 60 இலக்கிய வகைகளுக்கும் இலக்கணம் காணப்படுகிறது. கி,பி. 17 ஆம் நூற்றாண்டில் இலக்கண விளக்கம் நூல் எழுதப் பெற்றது. இதில் அமைந்த பாட்டியல் பகுதியில் 66 இலக்கிய வகைகளின் இலக்கணம் உள்ளது. வீரமா முனிவரின் தொன்னூல் விளக்கம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டினது. இதில் 35 இலக்கிய வகைகளின் இலக்கணம் உள்ளது. பின்னர், கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் மூன்று பாட்டியல் நூல்கள் எழுந்தன. இவற்றுள், பிரபந்த தீபிகையில் 77, சுவாமி நாதத்தில் 37, முத்து வீரியத்தில் 90 இலக்கிய வகைகளின் இலக்கணம் உள்ளது.

காலந்தோறும் எழுந்த பாட்டியல் நூல்கள், இலக்கிய வகைகளின் இலக்கணத்தை ஒழுங்கு படுத்திக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த செய்தியை, இதனால் அறியலாம்.

முதற் பாட்டியலான பன்னிரு பாட்டியலில் கூறப்படும் 62 இலக்கிய வகைகளில், பிற்காலத்தில் வழங்கிய 96 என்னும் இலக்கியப் பட்டியலில் அடங்குவன 43 வகைகள். மட்டுமே. மேலும் அனைத்துப் பாட்டியல் நூல்களிலும் தொடர்ந்து இலக்கணம் கூறப்பெற்ற இலக்கிய வகைகள் பதினொன்று மட்டுமேயாம்.[16] எனவே, பாட்டியல் நூல்களில், இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுவதில் ஓர் ஒழுங்குக்குரிய வரையறை இல்லை. முந்திய பாட்டியல் இலக்கணம் கூறிய இலக்கிய வகைகளை விடுத்தல், காலச் சூழலுக்கு ஏற்பப் புதிய இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தி இலக்கணம் வரைதல் என்று இத்தகைய தன் விருப்பச் செயல்களால் 'இலக்கியம் கண்டதற் கேற்ப இலக்கணம் இயம்பப்படும்' என்ற மரபும் மாற்றம் பெற்றது. இலக்கியம் கண்டதற்கு மட்டுமின்றி, இலக்கியம் காணவேண்டியதற்கும் இலக்கணம் கூறும் நிலை எழுந்தது. புதிய இலக்கிய வகை என்று அறிமுகப்படுத்தி, இலக்கணம் கூறும் பெரு வேட்கையால், பழைய அகத்துறைகளையும், புறத்துறைகளையும் கூட இலக்கிய வகை என்ற பெயரால் குறிப்பிட்டுப் பாட்டியலார் இலக்கணம் உரைத்தனர்.

எனவே, பாட்டியல் நூலாரிடம் காணப்படும் இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறும் முயற்சி, பெரும்பாலும் பயனற்றதாய் அமைந்தது. தோன்றிய இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுதல், அவற்றை வரையறை செய்தல் ஆகியவற்றைப் பாட்டியல் நூலார் செம்மையாகப் பின்பற்றவில்லை.

14. பாட்டியலும் இலக்கிய வகைகளும் — டாக்டர் ந.வீ. செயராமன் — சென்னை, இலக்கியப் பதிப்பகம், 1981, ப. 17.

15. "Assuming therefore that it arose long after the third Academy period, we would not be wrong if we placed it (Panniru Pattiyal) somewhere between the 7th and the 10th Centuries A.D."
– **Advanced studies in Tamil prosody** – Dr. A.C. Chettiar, Annamalai University, P. 183.

16. ''பதினொரு இலக்கிய வகைகள் மட்டுமே கி.பி. 12 ஆம் நுற்றூண்டாகிய பன்னிரு பாட்டியல் காலம் முதல் கி.பி. 19 ஆம் நூற்றூண்டு வரை அனைத்துப் பாட்டியல் நூல்களாலும் இலக்கணம் கூறப்பட்ட சிறப்பினைப் பெற்றுள்ளன. இரட்டை மணிமாலை, உலா, கலம்பகம், கோவை, நான்மணிமாலை, பரணி, பன்மணிமாலை, பிள்ளைத்தமிழ், மடல், மும்மணிக்கோவை, மும்மணிமாலை என்பனவே அப்பதினொரு இலக்கிய வகைகள்''
— பாட்டியலும் இலக்கிய வகைகளும், ந.வீ. செயராமன், சென்னை, இலக்கியப் பதிப்பகம், 1981, ப. 36.

## இலக்கிய வகை: எண்ணிக்கை வரையறை

தமிழில் அமைந்த இலக்கிய வகைகளைக் குறிப்பிட்ட எண்ணிக்கை வரையறைக்குள் அடக்கிக்கூறும் முயற்சி கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தமிழிலக்கிய வகைகள் 96 வகை என்று சில பாட்டியலார் இப்பட்டியல் எண்ணிக்கையை வரையறை செய்தனர். இவ் வரையறையை முதலில் தொடங்கி வைத்தவர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற பிரபந்த மரபியலின் ஆசிரியர். 'பிள்ளைக்கவிமுதல் புராணம் ஈறாத் தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்' என்பது பிரபந்த மரபியல் நூற்பாத் தொடர், இக்கால எல்லைக்கு முன்னர் இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்ற பட்டியலில் எந்தப் பாட்டியலாரும் அடக்கிக் கூறவில்லை. பிள்ளைத்தமிழ் முதலாகப் புராணம் ஈறாக இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என வரையறுத்துக் கூறும் இம்மரபு, பிற்காலத்திலும் தொடர்ந்தது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்ததாகக் கருதப்படும் சிவந்தெழுந்த பல்லவன் உலா நூலில் 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று இறைவனைப் போற்றும் தொடர் பயின்றுள்ளது. கி.பி. 1732ல் வீரமா முனிவர் இயற்றிய சதுரஅகராதியில் சாதகம் முதலாகச் சிறுகாப்பியம் ஈறாக வரும் 96 இலக்கிய வகைகளின் பட்டியலும், அவற்றின் இலக்கணமும் அமைந்துள்ளன. பிரபந்தமரபியல் காலம் முதலாக இருந்து வந்த 96 இலக்கிய வகைகளின் வரிசை முறை, முதன் முதலாகச் சதுர அகராதியில் மாற்றம் பெறுகிறது.

சதுர அகராதியில் அமைந்த இம்மாற்றமே பிற்காலத்தில் தொடர்ந்து செல் வாக்குப்பெற்ற வரிசை முறையாகப் பயின்றது. வீரமா முனிவரின் காலத்தை ஒட்டி வாழ்ந்தவராகக் கருதப்படும் குடுமியாமலை சுப்பிரமணிய பாரதி, தான் எழுதிய பொருட் டொகை நிகண்டில் 'பிரபந்தம் 96 ஆம்; அவை சாதகம், பிள்ளைக்கவி... பெருங்காப்பியம் சிறுகாப்பியமே' என விளக்கம் வரைந்துள்ளார். 96 என்ற இலக்கிய வகைப் பட்டியல் நிகண்டு நூல்களில் இக்காலத்தில்தான் முதன் முதலாக இடம் பெற்றுள்ளது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய முதல் தமிழ் நிகண்டாகிய திவாகரம் மற்றும் பிற்கால நிகண்டுகளில் சிற்சில இலக்கிய வகைகளின் பெயர்கள் மட்டும் உள்ளனவே தவிர, 96 என்ற தொகைப் பட்டியல் இல்லை.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டினதாய பிரபந்ததீபிகை என்ற நூலிலும் வீரமாமுனிவர் வகுத்த வரிசை முறையே பின்பற்றப்பட்டுள்ளது. 'பதினாறையாறிற் பெருக்கிப் பிரபந்தாதி பலவகை எடுத்துரைக்கின்' என்பது பிரபந்த தீபிகைத் தொடர்.

எனவே இலக்கிய வகைகளைக் குறிப்பிட்ட எண்ணிக்கை வரையறைக்குள் அடக்கிக் கூறும் முயற்சி கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது என்பதையும், இன்று 96 என்ற பட்டியலில் அமைந்த இலக்கிய வகைகளின் வரிசை முறை கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் எழுந்த சதுர அகராதியில் அமைந்த வரிசை முறையாகும் என்பதையும் இக் குறிப்புக்களால் அறிகின்றோம்.

## தொண்ணூற்றாறு – எண் தேர்வுக்குரிய காரணம்

இலக்கிய வகைகளை எண்ணிக்கை வரையறைக்குள் அடக்கிக்கூற முனைந்த பாட்டிய லார் அவற்றைத் தொண்ணூற்றாறு என்னும் தொகையில் அடக்கிக் கூறியமைக்குத் தெளி வான காரணம் புலப்படவில்லை. எனினும் இவ்வெண்ணைத் தேர்ந்தமைக்குச் சில காரணங் களை ஊகித்துக் கூற இயலும்.

குறிப்பிட்ட ஒன்றை வரையறை செய்து கூறுங்கால், 96 என்ற தொகை எண்ணைக் கூறுவது, சங்ககாலத்திற்குப் பின்னர், பெரும்பான்மை மரபாகப் பல்வேறு நிலைகளிலும் பயின்று வந்துள்ளது.

சமய சாத்திரத் தருக்கக் கோவையின் எண்ணிக்கையை 96 என்பர். அடியார்க்கு நல்லார் 'பாசண்டம்' என்ற சொல்லுக்குத் தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவை என்று பொருளுரைத்துள்ளதால் இதனை அறியலாம்.[17] சமயசாத்திரத் தருக்கக் கோவைகளின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என்பதை,

பண்ணுற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட
தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன்
விண்ணு றியங்கும் விறலவ ராயினும்
கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்

எனவரும் வளையாபதிச் செய்யுளும்

பாசண்டத் துறையும் இவற்றுள் பலவாம்
பேசிற் றொண்ணூற் றறுவகைப் படுமே

எனவரும் திவாகர நூற்பாவும் கூறியுள்ளன. இம்மரபைப் பின்பற்றி இலக்கிய வகைகளையும் தொண்ணூற்றாறு எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

இங்ஙனமே, சைவசமயத் தத்துவங்களையும் தொண்ணூற்றாறு எனக் குறிப்பிடுதல் உண்டு. சைவத் தத்துவங்களைத் தொண்ணூற்றாறு என்பது போலப் பிரபந்தங்களையும் தொண்ணூற்றாறு எனக் கூறியிருக்கலாம் என்ற கருத்தையும் கூறுவர்.[18]

பிற்காலச் சோழ மன்னர்களின் முன்னோடியாகிய சோழன் விசயாலயனைத் தொண் ணூற்றாறு விழுப்புண் கொண்டிருந்தவன் எனப் பாராட்டுவர்.[19] சோழமன்னன் ஒருவன் தொண்ணூற்றாறு விழுப்புண் கொண்டிருந்த சிறப்பைச் சோழர் கால உலா இலக்கியங்களும் குறிப்பிட்டுள்ளன.[20]

அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதை உரையில் வரிக்கூத்து வகைகளை விளக்குங் கால் சிந்துப்பிழுக்கைக் கூத்து முதலாகப் பறைமைக் கூத்து ஈறாகத் தொண்ணூற்றாறு வகைகளை ஒரு பழம் பாடலை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார்.[21]

17. சிலம்பு – கனாத்•காதை – அடி. நல். உரை விளக்கம். அடி, 14 – 15.
18. 'சைவத் தத்துவம் தொண்ணூற்றாறு என்பது போலப் பிரபந்தம் 96 என்னும் வழக்கும் எப்படியோ புகுந்து விட்டது' – இலக்கியக் கொள்கை – சிறுபிரபந்தங்கள் – மு. சண்முகம்பிள்ளை – சென்னை, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், 1977, ப. 76.
19. 'விசயாலயன் என்பதே, இவன் பலபோர்கள் புரிந்து வெற்றி பெற்றமை பற்றி அக்காலத்தில் இவனுக்கு வழங்கி வந்த சிறப்புப் பெயராகவும் இருக்கலாம். ஆகவே, தன் மார்பில் தொண்ணூற்றாறு புண் கொண்ட வெற்றி வேந்தன் நம் விசயாலயனேயாவான்'
– பிற்காலச் சோழர் வரலாறு, முற்பகுதி – தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் – அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958, ப. 20.
20. அ. எண்கொண்ட தொண்ணூற்றின் மேலுமிரு மூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும் – விக். சோ. உலா – க. 15.
ஆ. சீறும் செருவிற் றிருமார்பு தொண்ணூறும்
ஆறும் படுதழும்பின் ஆரத்தோன் – குலோ சோ. உலா – க. 21.
இ. தொழும்புடைய வாகத்துத் தொண்ணூறு மாறும்
தழும்புடைய சண்டப்ர சண்டன் – இராச. சோ. உலா – க. 19.
ஈ. புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணுகத்
தொண்ணூறு மாறுஞ் சுமந்தோனும் – சங். சோ. உலா – க. 15.
21. சிலம்பு. அரங். காதை. – அடி. நல். உரை விளக்கம் அடி. 13.

இங்ஙனம், சைவசமய சாத்திரத் தருக்கக் கோவைகள், சைவ சமயத் தத்துவங்கள், மன்னர் பெற்ற விழுப்புண்கள், வரிக்கூத்துக்கள் ஆகியவற்றை எல்லாம் தொண்ணூற்றுறு வகை எனத் தொகைப் பெயர் கொடுத்து வழங்கிய மரபைப்போல, இலக்கிய வகைகளையும் தொண்ணூற்றுறு எனக்கூறும் வழக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதலாம்.

## இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை

தமிழிலுள்ள இலக்கிய வகைகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து, அவற்றின் வகைகளை எண்ணிக்கை வரையறைப் படுத்தும் முயற்சி இன்றைய தமிழுலகின் இன்றியமையாத பணி.

தொல்காப்பியர் காலத்தில் 42 இலக்கிய வகைகள் வழங்கின என்று வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். பாட்டியல் நூல்களில் 96 என்ற பட்டியலில் அடங்கும் இலக்கிய வகைகளேயன்றி, மேலும் 39 இலக்கிய வகைகளுக்குரிய இலக்கணங்களும் கூறப்பெற்றுள் ளன. இங்ஙனம் பட்டியல் வகையாலும் பட்டியலில் அடங்காமலும் பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்பெற்ற இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை 135 ஆகும்.[22] இவற்றுள், சில இலக்கிய வகைகளின் உட்பிரிவுகளையும் தனித்தனி வகைகளாகக் கொண்டு, பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்பெற்ற இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை 151 என்றும் கூறப்படும்.[23]

தொல்காப்பியர் காலத்தில் வழங்கியனவாகவும், பாட்டியல் நூல்கள் அனைத்திலும் சுட்டப்படுவனவாகவும் அமைந்த இலக்கிய வகைகளுக்கு மேலும், இன்று, தமிழில் 85 இலக்கிய வகைகள் வழங்குகின்றன என்றும் வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.[24] இந்தப் பட்டியலிலும் அடங்காமல் மேலும் 83 இலக்கிய வகைகளும் இன்று உள.[25]

பல்வேறு நிலைகளில், பல்வேறு நூல்களில் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்து நோக்குழி, தமிழில் உள்ளனவாக ஏறத்தாழ 350 இலக்கிய வகைகளின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளதை அறியலாம்.

இவற்றுள் சில வகைகளின் பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டியல்களில் இடம் பெற்றுள்ளன. ஒரே இலக்கணம் உடைய சில வகைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு மேலும், இப்பட்டியல்களில் அமைந்த வகைகள் சில வற்றுக்கு எக்காலத்தும் இலக்கியம் தோன்றியதில்லை. இங்ஙனம் வெறும் பெயர் நிலையாலும், இலக்கண வகையாலும் இரட்டித்து வருவனவற்றையும், இலக்கியம் தோன்றுமல், பெயர ளவில் மட்டுமே இலக்கிய வகைகளாய்ச் சுட்டப்படுவனவற்றையும் நீக்கிக் காணுங்கால், தமிழில் இன்றுள்ள இலக்கிய வகைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 280 – 300 அளவில் மட்டுமே உள்ளன என்பது புலனுகும். ஏறத்தாழ 300 வகைகளில் 1500 புலவர்களால் பாடப்பெற்ற 5,000 சிற்றிலக்கிய நூல்கள் இன்று தமிழில் உள்ளன. இவற்றுள், ஏறத்தாழ செம்பாதி அளவினவே பொருட்சிறப்பாலும், இலக்கியப் பரப்பாலும் மிகுதியும் சிறந்து விளங்குகின்றன.

22. சிற்றிலக்கியத்திறனய்வு – டாக்டர் ந.வீ. செயராமன் – சென்னை, இலக்கியப் பதிப்பகம், 1980, ப. 34.
23. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும் – டாக்டர் முத்துச் சண்முகன், நிர்மலா மோகன் – மதுரை, முத்துப் பதிப்பகம், 1979, பு. 13.
24. நவநீதப் பாட்டியல் பதிப்பு – எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பு. பக். 120 – 121.
25. சிற்றிலக்கியத் திறனய்வு – டாக்டர் ந.வீ. செயராமன் – சென்னை, இலக்கியப் பதிப்பகம், 1980, ப. 43 – 44.

## வகைப்படுத்துதல்

இன்றுள்ள இலக்கிய வகைகள் அனைத்தையும் குறிப்பிட்ட சிலநிலைகளில் தொடர்பு படுத்தி வகைப்படுத்தும் முயற்சி, இன்றுவரை தமிழில் முழுமையாக எழவில்லை. சில சில தொகுதியில் அமைந்த இலக்கிய வகைகளைச் சிலர் வகைப்படுத்தி மொழிந்துள்ளனர்.

தொல்காப்பியர் கால இலக்கிய வகைகள் எனத் தான் கருதும் 46 இலக்கிய வகைகளை 1. அகம் பற்றியன 2. புறம்பற்றியன 3. அரசனொடு தொடர்பு கொண்டவை 4. மக்கள் தொடர்பு கொண்டவை 5. பொது வகையால் அமைந்தவை 6. வாழ்த்துவகை 7. செய்யுள் வகைகள் என ஏழு பிரிவுகளிலும் இன்று தமிழில் அமைந்த புது வகைப் பிரபந்தங்கள் எனத் தான் கூறியுள்ள 83 இலக்கிய வகைகளை 1. பாவினால் பாகுபாடு பெற்றவை 2. சந்த வகையால் பாகுபாடு உற்றவை 3, பாடல் எண் தொகையால் வேறுபடுத்தப் பெற்றவை. 4. பாடல் அமைப்பு வகையால் அமைந்தவை. 5. வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு உடையவை 6. மகளிர் விளையாட்டின் அடிப்படையில் பிறந்தவை. 7. தொழில் முறையில் எழுந்தவை 8. பொருளின் தன்மையால் பிரிவுபட்டவை என எட்டுப் பிரிவுகளிலும் வகைப்படுத்தி மொழிவர் மு. சண்முகம் பிள்ளை.[26]

பாட்டியல் நூல்களில் குறிப்பிடப்பெறும் இலக்கிய வகைகளை எல்லாம் 1. திணை, துறை வகைகள் 2. பாட்டு வடிவ வகைகள் 3. மாலை வகைகள் 4. நாட்டுப்பாடல் அடிப்படையிலான வகைகள் 5. பொருள் அடிப்படையிலான வகைகள் என்ற ஐந்து பெரும் பிரிவுகளில் அடக்கிக் கூறலாம் என உரைத்து, ஒவ்வொரு வகைக்கும் சில உதாரண இலக்கிய வகைகளையும் சுட்டியுள்ளார் டாக்டர் தமிழண்ணல்.[27]

பாட்டியல் நூல்களில் கூறப்பெற்ற இலக்கிய வகைகளில் இன்று இலக்கியமாக அமைந்தனவற்றை 1. புலமை இலக்கியம் 2. நாட்டுப் புறப் புலமை இலக்கியம் 3. நாட்டுப் புற இலக்கியம் என்னும் மூவகையாகப் பகுக்கலாம் என்றும், பாட்டியல் நூல்களில் கூறப்பெறாமல் இன்று புதியனவாய்த் தோன்றிய சிற்றிலக்கியங்களை 1. நாட்டுப் பாடல் அடிப்படையில் தோன்றியவை 2. இசைப் பாடல் அடிப்படையில் தோன்றியவை 3. பாவகையால் பெயர்பெற்றவை. 4. சித்திரக் கவிகளாய் அமைந்தவை என்னும் நால் வகையாகப் பகுக்கலாம் என்றும் டாக்டர் முத்துச் சண்முகம் உரைத்துள்ளார்.[28]

இங்ஙனம், அவ்வப்போது, சிற்றிலக்கிய வகைமைச் சிந்தனைகள் அறிஞர்களிடையே எழுந்திருப்பினும், இன்று தமிழிலுள்ள சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் ஒருசேர வகைமைப் படுத்தும் முழுமையான முயற்சியாக இவை அமையவில்லை.

தொல்காப்பியர் காலம் முதலாக இன்றுவரை, தமிழில் இலக்கிய வகைகள் எனப் பலராலும், பல்வேறு காலங்களில் சுட்டப் பெற்றனவற்றின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 300 ஆகும். இவற்றுள் சில, ஒரே வகைப் பொருண்மை பெற்றிருப்பினும் வேறு வேறு பெயர்களால் கூறப் பெறுபவை. சில இலக்கிய வகைகள் இன்றும் பெயரளவால் மட்டுமே அறியப்படுவன. இம்முறையில் அமைந்த தமிழிலுள்ள இலக்கிய வகைகள் அனைத்தையும் கீழே கண்டவாறு வகைமைப்படுத்தலாம்.

26. சிற்றிலக்கிய வளர்ச்சி — மு. சண்முகம்பிள்ளை — சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1981, ப. 30 — 31, 41 — 43.
27. வையை — வியாழ வட்டக் கருத்தரங்க மலர் I — தமிழ் இலக்கிய வகைகள் — மதுரைப் பல்கலைக்கழக வெளியீடு — 1973 — 74, ப. 128 — 129.
28. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும் — டாக்டர் முத்துச் சண்முகன், நிர்மலா மோகன், மதுரை, முத்துப் பதிப்பகம், 1979, ப. 71. ப. 52 — 66.

## 1. அகப்பொருள் இலக்கிய வகைகள்

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் அகத்திணைகளாகவும், அகத்திணைத் துறைகளாகவும் சுட்டப்பெற்றவை இலக்கிய வகைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சில வகைகள், அகத்துறைப் பொருண்மைகளை உள்ளீடாகக் கொண்டு அமைந்தவை. பிற்காலத்தில் எழுந்த சில இலக்கிய வகைகளும் அகப்பொருண்மையைத் தழுவியனவாக உள.

ஐந்திணைச் செய்யுள், கைக்கிளை, கைக்கிளை மாலை என்னும் பெயரில் இலக்கிய வகைகளாகச் சுட்டப் பெற்றவை அகத்திணைச் சார்பின. வெறியாட்டு என்னும் பெயரிய இலக்கிய வகை அகத்துறைப் பெயரினது. அனுராகமாலை, தூது, பவனிக்காதல், பெயர் மாலை, பெருமகிழ்ச்சிமாலை, மடல், வசந்தமாலை, விரகமாலை, வேனில்மாலை என்பன அகத்துறைப் பொருண்மைகளை உள்ளீடாகக்கொண்டு வளர்ச்சி பெற்றவை. காதல் என்னும் பிற்கால இலக்கியமும் அகப்பொருண்மையைத் தழுவி அமைந்ததே.

## 2. அரச இலக்கிய வகைகள்

புறப்பொருள் சார்புடைய இலக்கிய வகைகளில், சில நேர்முகமாக அரசனைப் புகழ்வனவாகவும், அரசனோடு தொடர்புடைய பிறவற்றைச் சிறப்பிப்பனவாகவும் உள. இவை புறப்பொருள் துறைகளோடு தொடர்பற்றவை. இடைக்கால அரசாட்சிகளைச் சார்ந்து பிறந்தவை.

அரசன் விருத்தம், ஐம்படைமாலை, ஐம்படை விருத்தம், சிங்காதனக் கவிதை, சின்னப்பூ, தசாங்கத்தயல், தசாங்கம், தண்டிகைக் கவிதை, தானைமாலை, திக்கு விஜயம், படைப்போர், படைவெட்டு, மெய்க்கீர்த்தி என்பன இம்முறையில் பாகுபடுத்தத் தக்க இலக்கிய வகைகள்.

## 3. புறப்பொருள் இலக்கிய வகைகள்

புறத்திணைகளின் பெயர்களை இலக்கிய வகைகளாக்கும் முயற்சியில், உழிஞைமாலை, காஞ்சிமாலை, தும்பைமாலை, நொச்சிமாலை, வாகைமாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக் கரந்தை மஞ்சரி ஆகிய இலக்கிய வகைகளின் பெயர்கள் எழுந்துள்ளன.

தொல்காப்பியம் முதலாய இலக்கண நூல்களில் புறத்துறைகளாக நேர்முகமாகச் சுட்டப் பெறுபவை இலக்கிய வகைகளின் பெயர்களாகவும் அமைந்துள்ளன. அவையடக்கியல், இயன்மொழி வாழ்த்து, செவியறிவுறூஉ, செவியுறைச் செய்யுள், புறநிலை, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, வாழ்த்து எனவரும் இலக்கியப் பெயர்கள் தொல்காப்பியர் கூறும் வாழ்த்தியல் வகையைச் சார்ந்தவை. ஆற்றுப்படை, ஓம்படை, கடாநிலை, கடைக்கூட்டுநிலை, கடைநிலை, கண்படைநிலை, கந்தழி, கல்நடுதல், களவழி, குடைநாட்கோள், குடைநிழல் மரபு, குடைமங்கலம், கொடி நிலை, கொற்றவள்ளை, செருக்களவஞ்சி, செருக்களவழி, துயிலெடைநிலை, பூவைநிலை, பெருமங்கலம், மண்ணுமங்கலம், மறக்கள வஞ்சி, மறம், முதுகாஞ்சி, யானைத்தொழில், யானைவஞ்சி, வரலாற்று வஞ்சி, வள்ளி, வாண் மங்கலம், வாள்நாட்கோள், விளக்கு நிலை, வேள்விநிலை என வரும் இலக்கிய வகைப் பெயர்கள் புறத்துறைகளாகக் குறிப்பிடப்பெற்றவை.

உலா, உலாமடல், ஊரொடு தோற்றம், குழமகன் என்பன ஒரே பொருளைச் சார்ந்து பலவாய் உருப்பெற்ற வகைமைகள். பரணி, வாதோரணமஞ்சரி என்பனவும் இம்முறையில் ஒரேபொருள் சார்ந்தவையே. இவையும் பிள்ளைத்தமிழ் என்னும் வகையும் புறத்துறைகளின் கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை.

## 4. யாப்பு இலக்கிய வகைகள்

புலவர்கள், பல்வேறு யாப்பு வகைகளைக் கொண்டு இலக்கியம் புனையுங்கால், யாப்பு வகையாலும் அவற்றுக்குப் பெயர் குறிப்பிட்டுள்ளனர். யாப்பு வகைப் பெயரால் தனித்தும், யாப்பும் பொருளும் இணைந்தும் அமைந்த இவ்விலக்கியங்கள் இவ்வகையில் பகுக்கத்தக்கவை.

அகவல், ஆசிரியம் என்பன ஆசிரியப்பா வகையால் பெயர் பெற்றவை. ஊர் வெண்பா, கடிகை வெண்பா, சிலேடை வெண்பா, வெண்பா அந்தாதி என்று பொதுவாகவும், இன்னிசைத் தொகை, ஊர் இன்னிசை, பெயரின்னிசை, ஊர்நேரிசை, பெயர் நேரிசை என்று சிறப்பாகவும் வருவன வெண்பா வகையில் அமைந்தவை. கலியந்தாதி, கலிவெண்பா, ஒருபோகு என்பன கலிப்பா வகையில் பெயர் பெற்றவை. பரிபாடல், மருட்பா என்பன பிற யாப்பு இலக்கிய வகைகள். கலித்துறை அந்தாதி, ஆசிரிய விருத்தம், கழிநெடில், மட்டுவிருத்தம், விருத்த இலக்கணம், விருத்தம் எனவரும் இலக்கிய வகைப் பெயர்கள் பாவினங்களால் பெயர் பெற்றவை.

வண்ணத்தாழிசை, வண்ணப் பதிகம், வண்ணம், கண்ணி, சந்தவிருத்தம், தண்டக மாலை, தாண்டகம் என்பனவும் பிற்கால யாப்பு வகைகளால் பெயர் பெற்றனவே.

## 5. எண் – இலக்கிய வகைகள்

குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய பாடல்களைப் பாடி, அவ்வெண்ணிக்கையால் இலக்கிய வகைகளுக்குப் பெயர் கொடுத்து வழங்கிய மரபும் நிலவியது. எண்செய்யுள், எண்மாலை, தொகைச் செய்யுள் எனப் பொதுப் பெயரால் இத்தகைய எண் வகை இலக்கியங்கள் வழங்கின. பொதுப் பெயரால் மட்டுமின்றிச் சிறப்பு எண்ணிக்கையின் பெயராலும் இலக்கிய வகைகளுக்கு வெவ்வேறு கோணங்களில் பெயர் வழங்கப் பெற்றுள்ளது. ஐந்து என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு அலங்காரப் பஞ்சகம், பஞ்சகம், பஞ்சரத்தினம் ஆகியனவும், எட்டு என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு, அட்டமங்கலம், அட்டகம், எட்டு ஆகியனவும், பத்து என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு ஒருபா ஒருபஃது, தசகம், பத்து, பதிகக் கோவை, பதிகம் ஆகியனவும் இலக்கிய வகைப் பெயர்களாக அமைந்துள்ளன.

ஏகாதசமாலை, சோடசம், இருபா இருபஃது, நாற்பது, எழுபது, சதகம், தொள்ளாயிரம், ஆயிரம் என்பன எண்வகையில் பெயர் பெற்று விளங்கும் பிற இலக்கிய வகைகள்.

## 6. எழுத்து – சொல்லணி இலக்கிய வகைகள்

எழுத்துக்களையும் சொற்களையும் அணிபெற அமைத்துப் புலமைச் சிறப்பை வெளிப்படுத்தும் நிலையால் சில இலக்கிய வகைகள் எழுந்துள்ளன. இம்முறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இலக்கிய வகை அந்தாதியாகும். அந்தாதி, இதழகலந்தாதி, எழுத்தந்தாதி, ஒலியலந்தாதி, கலித்துறையந்தாதி, கலிவிருத்த அந்தாதி, சிலேடையந்தாதி, திரிபந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, நூற்றந்தாதி, பதிற்றந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி, யமக அந்தாதி, வெண்பா அந்தாதி எனப் பதினன்கு வகையினவாக அந்தாதி இலக்கியங்கள் பல்கியுள.[29]

ஓரடியின் இறுதி எழுத்து அல்லது சொல் அடுத்த அடியின் முதலாக அமையப் பாடும் அந்தாதி இலக்கியங்களின் சில வகைகளில் சிலேடை, திரிபு, நிரோட்டகம், யமகம் முதலிய சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. எழுகூற்றிருக்கை, கண்டம், பிசி என்னும் வகைகளும் சொல்லணி பயின்ற இலக்கிய வகைகள், வருக்கக் கோவை, வருக்கமாலை என்பன எழுத்தணிகளாய் அமைந்தவை.

29. சிற்றிலக்கிய அகராதி – டாக்டர் ந.வீ. செயராமன் – சென்னை, பாரி நிலையம், 1983, ப. 11 – 36.

## 7. ஆலயச் சார்பு இலக்கிய வகைகள்

இடைக்காலத்தில் கோவில் வழிபாடும், கோவில்களில் திருவிழாக்கள் கொண்டாடப் படுதலும் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. ஆலயச் சடங்குகள் ஒவ்வொன்றையும் விளக்கும் வகையில் தனித்தனியே சில இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. அலங்காரம், அனந்தல், கட்டியம், சந்நிதிமுறை, சோபனம், திருக்கோலக் கவிதை, திருப்பணி மாலை, திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, வாகனக் கவிதை, வாகன மாலை என்பன இம்முறையில் ஆலயச் சார்புடன் எழுந்த இலக்கிய வகைகளாக உள்ளன.

## 8. பக்தி இலக்கிய வகைகள்

அருளாளர்கள் இறைவனைப் போற்றி வழிபடுவனவாக அமைந்தவை பக்தி இலக்கிய வகைகள். இணைமணி மாலை, இரட்டைமணிக் கோவை, இரட்டைமணி மாலை, உற்சவமாலை, ஏகமணிமாலை, ஏகாதசமாலை, ஐம்மணிமாலை, நவமணிமாலை, நவரத்தினம், நவரத்தின மாலை, நாமக்கோவை, நாம மாலை, நாமாவளி, நான்மணிக் கோவை, நான்மணிமாலை, மணிமாலை, மும்மணிக்கோவை, மும்மணிமாலை எனவரும் இலக்கியவகைகள் இறைவர்களின் அருளிச் செயல்களின் விளக்கங்களாகவும் போற்றித் திருப்புகழ் நூல்களாகவும் அமைந்தவை.

கவசம், காப்பு, காப்புமாலை, திருப்புகழ், திருமொழி, துதி, தோத்திரம், தோத்திரக் கீர்த்தனை, பிரசாதம், மகாத்மியம், மாலை, மான்மியம், லகரி, லீலை, வகுப்பு, விண்ணப்பம், விஜயம் என்பனவும் இறைவன் துதி நூல்களாக அமைந்த பக்தி இலக்கிய வகைகளேயாம்.

## 9. சமய இலக்கிய வகைகள்

சமயங்களின் தத்துவப் பொருட்களையும், இறைநிலை எய்திய அருளாளர்களின் பேரானந்த அனுபவப் பெருநிலைகளையும் விளக்குவனவாக அமைந்தவை சமய இலக்கிய வகைகள் என்னும் பகுப்பிற்குரியவை. அனுபூதி, அனுபோகம், உண்மை, உந்தியார், எச்சரிக்கை, ஒடுக்கம், கட்டளை, கீதை, சித்தியார், போதகம், போதம், மந்திரம், இதோபதேசம் என்னும் இலக்கிய வகைகள் சமய உண்மைகளையும் தத்துவ மெய்ப்பொருள் களையும் விளக்கி எழுந்தவை.

## 10. நாட்டுப்பாடல் இலக்கிய வகைகள்

நாட்டுப்புறப் பாடல்களாய் அமைந்த இலக்கிய வகைகளும் சில உள. ஏட்டில் எழுதாக் கவிதைகளாக, நெடுங்காலம் வாய்மொழி இலக்கியங்களாகவே வழங்கிய இவ்வகைகள் பிற்காலத்தில்தான் எழுத்துருவம் பெற்றன. புகழ்பெற்ற புலமைச் செல்வர்களும் நாட்டுப் பாடல்களின் செல்வாக்கை உணர்ந்து, அவ்வகையில் தாமும் சில இலக்கிய வகைகளைப் படைத்துள்ளனர்.

ஆனந்தக் களிப்பு, ஆனந்த மேலீடு, சிந்து, தாலாட்டு, தென்பாங்கு, வரிப்பாட்டு எனவரும் பெயர்கள் இம்முறையில் பகுக்கத்தக்க இலக்கிய வகைகளைச் சுட்டுவனவாம்.

## 11. நீதி இலக்கிய வகைகள்

மக்களின் வாழ்வுக்குத் தேவையான அறநெறிகளையும் அறிவுரைகளையும் கூறுவனவாக வரும் இலக்கிய வகைகளும் உள. இவை, நீதி இலக்கிய வகைகள் என்னும் பகுப்புக்குரியன.

ஆத்திசூடி, ஒழுக்கம், நீதி, வெற்றி வேற்கை என்பன இம் முறையில் அமைவன. நீதி என்னும் பெயர் வகையால் மட்டுமின்றி வேறு பல பெயர்களையும் கொண்டு இவை அமைந்துள்ளன. ஒவ்வொரு நீதி இலக்கிய வகைக்கும் பொருண்மை, அமைப்பு ஆகியவற்றில் சிற்சில மாற்றங்கள் உள..

## 12. மகளிர் விளையாட்டு – இலக்கிய வகைகள்

மகளிர் விளையாடல்கள் பலவகை. எழுவகைப் பருவத்தாருக்கும் ஏற்ப, விளையாட்டு வகைகளும் வேறுபடுகின்றன. அம்மானை, ஊசல், ஒயில் கும்மி, கும்மிப் பாட்டு, பந்தடிப் பாட்டு, பாவைப்பாட்டு, எனவரும் பல்வேறு இலக்கிய வகைகள் இப்பகுப்பில் அடங்குகின்றன.

## 13. இசை – நாடக இலக்கிய வகைகள்

இசையும் நாடகமும் முத்தமிழின் இருபொருட் பிரிவுகள், இசைப்பா, கீர்த்தனம், கீர்த்தனக் கவிதை, சங்கீர்த்தனம், பண்ணத்தி, பதம், ஜாவளி என்ற பெயர்களில் இசை இலக்கிய வகைகளும், சபா, நாடகம், விலாசம், வாசகப்பா என்ற பெயர்களில் நாடக இலக்கிய வகைகளும் பல எழுந்துள்ளன.

## 14. அங்க இலக்கிய வகைகள்

தலைவன் அல்லது தலைவியின் உறுப்புநலன் புகழ்தல் என்னும் பொருண்மையைக் கருவாகக் கொண்டு பிறந்த கேசாதிபாதம், நயனப்பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம் என்ற பெயரில் வரும் இலக்கிய வகைகள் அங்க இலக்கியங்கள் என்னும் பகுப்புக்கு உரியவை. அங்கங்கட்கு உரிய பணிகளைப் பக்தி நிலையில் குழைத்துத் தரும் இலக்கிய வகையாக விளங்குவது அங்கமாலையாகும். அங்க இலக்கியங்களில் வேறு சிலவும் பக்திப் பொருண்மை யுடன் பாடப்பெற்றுள்ளன.

## 15. சமுதாய இலக்கிய வகைகள்

சமுதாயம், பலதிற மக்களை உள்ளடக்கியது. உயர்நிலையினராகக் கருதப்படும் மக்களுக்கேயன்றித் தாழ்நிலையினராக அமைந்தவருக்கும் உரியனவாக இலக்கிய வகைகள் எழுந்துள்ளன. தொழில் நிலையாலும் பொருள் வளத்தாலும் வேறுபடும் இம்மக்களைப் பற்றிப் பல இலக்கிய வகைகள் உள. வயல்வேலை செய்யும் பள்ளர்கள் பற்றி உழத்திப்பாட்டு, பள்ளு ஆகியனவும், குறிகூறும் பணி செய்யும் குறவர்கள் பற்றி குறத்திப்பாட்டு, குறம், குறவஞ்சி ஆகியனவும் உள. மேலும் பறை நிலை, நொண்டிநாடகம், குளுவநாடகம், சிங்கிப் பாட்டு, ஏணியேற்றம், ஏலப்பாட்டு, ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு, கப்பல் பாட்டு ஆகியன வும் பல்வேறு தொழிலினராகிய எளிய மக்களின் வாழ்வியலைச் சுவையோடு விளக்கும் இலக்கிய வகைகள்.

உயர்திணைப் பொருள்களேயன்றி அஃறிணைப் பொருள்களை விளித்துப் பாடியன வாகச் சேவல்பாட்டு, தும்பிப்பாட்டு, மயில்பாட்டு என்பனவும் உள்ளன.

இசை கூறும் இலக்கியம் புகழ்ச்சிமாலை; இசையும் வசையும் கூறுவது அங்கதச் செய்யுள்; ஒருவருக்கு ஒருவர் ஏசும் பொருண்மையது ஏசல்; மனிதர் வாழ்வில் தொடர் புடையன ஆண்டுநிலை, சாதகம்; இல்லறம் பற்றியன இல்லற வெள்ளை, மங்கலவள்ளை; துறவறப் பொருண்மையது துறவு; திருமணத் தொடர்புடையன திருமணவாழ்த்து, நலுங்குப்பாட்டு, இலாலிப் பாட்டு; இரங்கல் பொருண்மை பயின்றவை இரங்கல், ஒப்பாரி, கையறம், கையறுநிலை, சரமகவி, பிரலாபம், புலம்பல் ஆகியன; தலங்களோடு தொடர்புடையன தலபுராணம், புராணம், சேத்திரக்கோவை; பயணம் பற்றியன செலவு, யாத்திரிகம், யாத்திரை; கடித இலக்கியங்கள் சீட்டுக் கவியும் திருமுகப் பாசுரமும்; தொழில் நிலை பற்றியன இலாவணிப் பாட்டு, வள்ளைப் பாட்டு, வில்லுப் பாட்டு – இங்ஙனம் சமுதாயத்தின் பல்வேறு கோணங்களையும் விளக்குவனவாய் அமைந்த இவ்விலக்கிய வகைகளெல்லாம் சமுதாய இலக்கிய வகை என்னும் பகுப்புக்கு உரியனவாய் உள.

தொல்காப்பியர் காலம் முதல் இருபதாம் நூற்றுண்டு வரை இலக்கிய நிலையிலும், பெயரளவிலும் குறிப்பிடப்பெறும் இலக்கிய வகைகள் அனைத்தையும் மேலே கூறியாங்கு பதினைந்து பகுப்பினவாக வகைப்படுத்தலாம். இவற்றுள் ஒரே பொருண்மை பயின்று வேறு

வேறு பெயர்களில் அமைந்த இலக்கிய வகைகளும் தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பகுப்புமுறை முடிந்த முடிபன்று; ஆனுல் முழுமையாக, முன்னேடியாக அமைந்த வழிகாட்டி.

## இலக்கிய வகைகளின் தோற்றம்

தமிழ் இலக்கிய வகைகளின் தோற்ற காலம் தொன்மை உடையது. சங்க காலம் முதலாகவே, சிற்றிலக்கிய வகைகள், முழுமையான உருவம், உள்ளடக்கம், உத்திமுறை களோடு தனித்த இலக்கியங்களாய் எழுந்துள்ளன.

சங்கத் தொகுதியான பத்துப் பாட்டில் செம்பாதி அளவின ஆற்றுப்படைநூல்கள். பத்துப் பாட்டில் அமைந்த ஐந்து ஆற்றுப்படை நூல்களில் முடத்தாமக் கண்ணியார் இயற்றிய பொருநராற்றுப் படையே காலத்தால் மூத்த இலக்கியம்.[30] இந்நூல் கரிகாற் பெருவளத் தானைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு பாடப் பெற்றது. இக்குறிப்புக்களால், தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் முதல் இலக்கிய வகை ஆற்றுப் படை என்பதும், இதன் தோற்ற காலம் சங்ககாலம் என்பதும், ஆற்றுப் படை இலக்கிய வகையில் முதல் நூலாக உள்ள பொருநராற்றுப்படையே முதல் இலக்கிய வகையின் முதல்நூல் என்ற பெருமைக்கு உரியது என்பதும் அறியத்தகும் செய்திகளாம்.

இலக்கியவகைகள், காலச் சூழலுக்கும், தேவைக்கும் ஏற்பப் புதுப்புது வடிவங்கொள்ளும் இயல்பின. சமுதாயத்தை நெறிப்படுத்தவும் அதன் அமைப்பை வெளிப்படுத்தவும் வல்ல ஆற்றல் வாய்ந்த கருவி இலக்கியமேயாகும். இலக்கியத்தின் மொழி நடை, செய்யுள், உரைநடை என்ற இரண்டாயினும், காலச்சூழலுக்கேற்ப அதன் வடிவமும் மாறுபடுகிறது என்னும் கருத்தை ''செய்யுள் உரைநடை என இலக்கிய வாயில்கள் எப்போதும் இரண்டாகவே இருந்து வந்தாலும், இவற்றிலிருந்து பிறக்கும் இலக்கிய வகைகள் எல்லாக் காலகட்டங்களிலும் ஒன்று போலவே இருந்ததில்லை. காலத்திற்குக் காலம், காலத்தின் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்றபடி இவை மாறியே வந்திருக்கின்றன'' என்று திறனியர் சுட்டியிருப்பது அறியத்தக்கதாகும்.[31]

சங்க காலத்தில் தொடங்கிய தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளின் வடிவம், நூற்ருண்டு தோறும் புதிய புதிய அமைப்பில், புதிய புதிய பெயரில் எழுந்து வளர்ச்சிபெற்றுள்ளது. தமிழ் இலக்கிய வகைகள், சங்க காலம் முதலாக நூற்ருண்டுதோறும் புதுப்புது வகைகளாக எங்ஙனம் உருப்பெற்று வளர்ச்சியடைந்துள்ளன எனக் காண்டல் இன்றியமையாதது.

### சங்ககாலம்

சங்ககாலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றப்பெறும். புது இலக்கிய வகையைத் தனித்த நிலையில் தோற்றுவித்ததோடு, பிற்காலத்தில் பல்வேறு இலக்கிய வகைகள் எழுவதற்குரிய அடிப்படைக் களங்களையும் சங்க இலக்கியங்கள் பெற்றுள்ளன.

முன்னரே கூறியாங்கு, சங்க காலத்தில் ஆற்றுப்படை என்ற புதிய இலக்கிய வகை தோன்றியுள்ளது. பத்துப் பாட்டில் அமைந்த பொருநராற்றுப்படை, திருமுருகாற்றுப் படை, பெரும்பாணுற்றுப் படை, சிறுபாணுற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்ற ஐந்து நூல்கள் சங்க காலத்தை தனியொரு இலக்கிய வகையின் பொற்காலமாகவும் ஆக்கியுள்ளன. சங்க காலத்தில் தோன்றிய ஆற்றுப்படை நூல்களுக்குப் பின்னர் பல நூற்ருண்டுகள் வரை ஆற்றுப்படை இலக்கியம் வளர்ச்சி பெறவில்லை. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் கி.பி. 17 ஆம் நூற்ருண்டுக்குப் பிறகே இவ்விலக்கிய வகை வளர்ச்சி பெற்றது. பத்துப் பாட்டில் தனி இலக்கிய வகையாக அமைந்த

30. சிற்றிலக்கியச் செல்வம் – டாக்டர் ந.வீ. செயராமன் – சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1979, ப. 36.
31. இந்திய·ஆய்விதழ் தொகுதி 1. – மலாயாப பலகலைக் கழக வெளியீடு – 1983 – ''புதுக் கவிதையின் தோற்றம்'' – டாக்டர் இரா. தண்டாயுதம், ப. 53.

காலத்திலேயே புறநானூற்றில் பாணாற்றுப்படை, புலவராற்றுப்படை, விறலியாற்றுப் படை முதலிய துறைகளில் அமைந்த தனிப்பாடல்களும் பாடப்பெற்றுள்ளன என்பது அறியத் தக்கது.

பத்துப்பாட்டில் தனி நூல்களாக அமைந்தவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை என்பன முறையே முல்லை, குறிஞ்சி, பாலை முதலிய திணைகளின் ஒழுகலாறு கூறும் இலக்கியங்கள். ஐந்து அகத்திணை ஒழுகலாறுகளையும் விளக்கும் இலக்கிய வகையான ஐந்திணைச் செய்யுள் என்பதை இலக்கண விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. எனவே, தனித்தனி திணை ஒழுகலாற்றைக் கூறும் இவ்விலக்கியங்களை ஐந்திணைச் செய்யுள் என்னும் இலக்கிய வகையோடு நெருங்கிய தொடர்புடையனவாகக் கொள்ளலாம். பத்துப் பாட்டு என்பதையே ஒரு இலக்கிய வகையாகப் பன்னிரு பாட்டியல் குறிப்பிட்டிருப்பதும் இவண் அறியத்தக்கது.

எட்டுத் தொகை நூல்களில் அகன் ஐந்திணை ஒழுகலாறு கூறும் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியனவும் இம்முறையில் ஐந்திணைச் செய்யுள் என்னும் இலக்கிய வகைகளாகக் கொள்ளப்படும் வாய்ப்புண்டு. எனினும், இவை எல்லாம் பல புலவர்கள் பாடிய தொகுப்பு நூல்களாதலாலும் குறிப்பிட்ட திணை அல்லது ஐந்திணையோடு தொடர்பு கொண்ட பெயர் பெறுமையாலும், இவற்றை ஐந்திணைச் செய்யுட்கள் என்னும் இலக்கிய வகைகளாகக் கொள்ளுதல் பொருத்தமில்லை.

பத்துப்பாட்டில் அமைந்த மதுரைக் காஞ்சி என்னும் நூல், தொண்ணூற்றாறு இலக்கிய வகைகளில் ஒன்றாகக் கூறப்படுவதும் முத்துவீரியப் பாட்டியலில் இலக்கணம் உரைக்கப்படுவதுமான முதுகாஞ்சி என்னும் இலக்கிய வகையாகக் கொள்ளத் தக்கது. நெடுநல்வாடை அகப்பாட்டன்று, வாகைத் திணையைக் கூறும் நூல் என்பது நச்சினார்க் கினியர் கருத்து.[32] அங்ஙனம் கொண்டால், வாகைமாலை என்னும் இலக்கிய வகையாக இது கொள்ளுதற்குரியதாகலாம். நெடுநல்வாடை அகப்பாட்டே என்றும் கூறுவர்.

எட்டுத்தொகை நூல்களில் முன்னர்க் குறிப்பிட்ட ஐந்து நூல்கள் தவிர, எஞ்சிய மூன் றனுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் தொகுப்பு நூல்களாக அமைந்தவை. பிறிதொன்றாய பரிபாடல் யாப்பு வகையால் பெயர்பெற்ற இலக்கியவகை. இங்ஙனம், ஆற்றுப்படை, ஐந்திணைச் செய்யுள், முதுகாஞ்சி, வாகைமாலை, பரிபாடல் என்னும் இலக்கிய வகைகள் சங்க காலத்தில் தோற்றம் பெற்றுள்ளன என்பதை இக்குறிப்புக்களால் அறியலாம்.

## இடைக்காலம்

சங்க மருவிய காலம் முதலாக, கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இடைக்காலம் என இங்குக் கொள்ளப்பட்டுள்ளது. பக்தி மறுமலர்ச்சிக்காலம், இக்கால எல்லையில் அடங்குகிறது.

சங்க மருவிய காலத்தில், நீதி இலக்கியங்கள் பல தோன்றின. பதினெண் கீழ்க்கணக் கில் கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலாய எண் செய்யுள் இலக்கிய வகைகள் எழுந்துள. பழமொழி, முதுகாஞ்சி ஆகிய இலக்கிய வகைகளும், நீதி என்னும் வகையில் வேறு பல இலக்கியங்களும் இக்காலத்தில் தோன்றின.

திருமூலர், காரைக்காலம்மையார் ஆகியோரின் காலமான கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் பக்தி இலக்கிய காலம் தொடங்குகிறது. இலக்கிய வகைகளைப் புதியனவாக அவ்வப்போது உருவாக்கியதில் பக்தி இலக்கிய காலத்திற்குப் பெரும் பங்குண்டு.

32. ''எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணை யாயிற்று. இப்பாட்டு, சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் வேம்பு தலை யமைத்து நோன்காழெஃகம் என அடையாளப்பூ கூறினமையின் அகமாகாதாயிற்று.'' — நெடு. — நச்சி. உரை விளக்கம்.